

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2053 டிசம்பர் 22, 2022 புரட்சி 21 முழக்கம் 49 விலை: ரூ.3.00

## மறைந்த 80வயது ஸ்டேன் பாதிரியார் மீது பொய் வழக்கு

# கணினிகளில் என்.அய்.ஏ. நடத்திய மோசடிகள்

பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டேன் சுவாமியின் கணினியில் திட்டமிட்டு ஹேக்கர்களால் வழக்குத் தொடர்பான ஆவணங்கள் திணிக்கப்பட்டது அமெரிக்க நிறு வனம் வெளியிட்ட ஆய்வறிக்கை மூலம் அம்பலமாகியுள்ளது.

1818 ஜனவரி 1ஆம் தேதி மராட்டியத்தில் உள்ள பீமா கோரேகானில் பிரிட்டிசாருக்கும் பேஷ்வா பார்ப்பனர்களுக்கும் இடையே போர் நடந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஆதரவோடு பேஷ்வா பார்ப்பனர்களைக் கிழக்கிந்திய கம்பெனி வீழ்த்தி போரில் வெற்றி பெற்றது. போரில் உயிர் நீத்த தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த 49 பேரின் நினைவாக பீமா கோரேகானில் நினைவுத்தூண் அமைக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி அதன் 200 ஆவது ஆண்டு நினைவு நாளை ஒட்டி நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மறுநாள் பீமா கோரேகானில் கலவரம் வெடித்ததால், அந்த நிகழ்ச்சியில் பேசியவர்கள் மீது வழக்கு பாய்ந்தது. உள்ளூர் போலீசார் விசாரணையைத் தொடங்கிய நிலையில் மாவோயிஸ்டுகளுக்கு தொடர்புள்ளதாகக் கூறி விசாரணையில் நுழைந்த என்.ஐ.ஏ., தெலுங்கானா-வைச் சேர்ந்த பிரபல கவிஞர் வரவர ராவ், வழக்கறிஞர் சுதா பரத்வாஜ், தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டேன் சுவாமி உள்ளிட்ட 16 சமூக செயற்பாட்டாளர்களைக் கைது செய்தது. ஸ்டேன் சுவாமி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டதற்கு கடும் கண்டனங்கள் எழுந்தன. ஆனால், கலவரம் ஏற்படுத்தவும், பிரதமரைக் கொல்லவும் இவர்கள் சதி செய்ததாக குற்றம் சாட்டிய தேசிய புலனாய்வுத்துறை, அவர்கள் மீது உபா சட்டத்தில் நடவடிக்கை எடுத்தது.

மராட்டிய மாநிலம் தலோஜா மத்திய சிறை யில் அடைக்கப்பட்ட ஸ்டேன் சுவாமி, வயது முதிர்வு, பார்கின்சன் நோயால் ஏற்படும் கை நடுக்கம் உள்ளிட்ட நோய்கள் காரணமாக மருத்துவ ரீதியிலான ஜாமீன் கேட்ட போதுகூட, நீதிமன்றம் மறுத்தது. உடல்நலம் மோசமான நிலையிலும் அவரை மருத்துவமனை சிகிச்சைக்கு அனுப்பினார்களே தவிர, ஜாமினில் வெளியே அனுப்பவில்லை. கை நடுக்கம் காரணமாக, உறிஞ்சிக் குடிப்பதற்குச் சிறையில் தனக்கு ஸ்ட்ரா வேண்டும் என்ற அவரது வேண்டுகோள்கூட ஏற்கப்படாதது மனித உரிமை ஆர்வலர்களை கொந்தளிக்க வைத்தது. மன நலமும் உடல்நலமும் பாதிக்கப்பட்டு, கொரோனா பாதிப்புக்கும் ஆளான ஸ்டேன் சுவாமி, 8 மாத சிறைவாசத்துக்குப் பின், 2021ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் தேதி மாரடைப்பால் காலமானார்.

> **போலி ஆதாரங்கள் மூலம் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது அம்பலமாகிவிட்ட பிறகும், பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்காமல் சிறையில் அடைத்து வைப்பது எவ்வித நியாயமும் அற்றது.**

ஸ்டேன் சுவாமி கைது செய்யப்பட்ட அவரது சதி வேலைக்கான ஆதாரங்கள் அனைத்தும் ஸ்டேன் சுவாமியின் கணினியில் இருப்பதாக என்.ஐ.ஏ. கூறியது. இதனை திட்டவட்டமாக மறுத்த ஸ்டேன் சுவாமி தரப்பு வழக்கறிஞர்கள், அமெரிக்காவில் உள்ள டிஜிட்டல் தடயவியல் அமைப்பான அர்செனல் கன்சல்டிங் நிறுவனத்தை அணுகினர். அந்நிறுவனத்திடம் ஸ்டேன் சுவாமி பயன்படுத்திய கம்ப்யூட்டரின் மின்னணு நகலை வழங்கி, ஆய்வு செய்யக் கோரினர்.

அதனடிப்படையில் அர்செனல் நிறுவனம் நடத்திய ஆய்வு முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அமெரிக்காவின் பிரபல செய்தி இதழான வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்டுள்ள அந்த ஆய்வறிக்கையில், ஸ்டேன் சுவாமியின் கம்ப்யூட்டரில் பல்வேறு ஆவணங்கள் திணிக்கப்பட்டிருப்பதாக கூறுகிறது. கைது செய்யப்படுவதற்கு முந்தைய 5 ஆண்டுகள் ஸ்டேன் சுவாமியின் கணினி முழுமை யாக ஹேக் செய்யப்பட்டுள்ளதும், ஸ்டேன் சுவாமிக்கு தெரியாமல் ஏராளமான கோப்புகள் அவரது கம்ப்யூட்டரில் திணிக்கப்பட்டதும் ஆய்வில் வெளிவந்துள்ளது.

மாவோயிஸ்டுகளுக்கு எழுதிய கடிதங்கள் என காவல்துறையால் சொல்லப்பட்ட கடிதங்கள் உள்ளிட்ட 44 ஆவணங்களே ஹேக்கர்கள் மூலம் ஸ்டேன் சுவாமியின் கணினியில் திணிக்கப்பட்டுள்ளன என்றும் ஆய்வறிக்கை கூறுகிறது.


2014 அக்டோபர் மாதம் ஸ்டேன் சுவாமியின் கணினியில் NetWire என்ற மென்பொருளை செலுத்திய ஹேக்கர்கள், கணினிக்கான கடவுச்சொற்களைத் திருடியதுடன், ரிமோட் கண்ட்ரோல் மூலம் அதனை இயக்கும் வகையிலும் மாற்றி அமைத்துள்ளனர். ஸ்டேன் சுவாமியின் கணினியில் இருந்த 24,000க்கும் அதிகமான கோப்புகளை ஹேக்கர்கள் திருடியுள்ளனர்.

இறுதியாக 2019 ஜூன் 11 ஆம் தேதி, ஸ்டேன் சுவாமி கைது செய்யப்ளபட்டு, அவரது கணினி பறிமுதல் செய்யப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்பு, கண்காணித்தது, கோப்புகளைத் திருடியது போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் தடம் தெரியாமல் அழித்துள்ளனர். இதே வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சமூக ஆர்வலர் ரோனா வில்சன் மற்றும் வழக்கறிஞர் சுரேந்தர் கட்லிங் (Gadling) ஆகியோரின் கணினியில் இருந்தும், இதே யுக்தி பயன்படுத்தப்பட்டு கோப்புகள் திருடப்பட்டுள்ளதையும் அர்செனல் ஆய்வறிக்கை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

பீமா கோரேகான் வழக்குக்கு பிறகே சமூக செயற்பாட்டாளர்களை அர்பன் நக்சல்கள் என்ற புதிய சொல்லை வைத்து பாரதிய ஜனதா பிரமுகர்கள் உச்சரிக்கத் தொடங்கியுள்ளனர்.

எனவே சமூக செயற்பாட்டாளர்கள், ஒன்றிய அரசுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை ஒடுக்குவதற்காக திட்டமிட்டே ஹேக்கர்கள் மூலம் பொய்யான ஆவணங்களைத் திணித்து, அதன் பேரில் நடவடிக்கை எடுக்கும் சதிச் செயல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. போலி ஆதாரங்கள் மூலம் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது அம்பலமாகிவிட்ட பிறகும், பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்காமல் சிறையில் அடைத்து வைப்பது எவ்வித நியாயமும் அற்றது. எதிர்காலத்தில் இதே பாணியில் சமூக செயற்பாட்டாளர்கள் முடக்கப்படாமல் இருக்க ஹேக்கர்களை வைத்து போலி ஆவணங்களை திணித்தது யார் என்ற விசாரணை நடத்த வேண்டியதும் அவசியமாகியுள்ளது.

**– ர. பிரகாஷ்**



## வேள்விகளை வெடி வைத்துப் பொசுக்கியவர்

வேரோடிப் போயிருந்த சனாதனத்தை
 வெட்டியதோர் நெடுவாளே ! இந்த நாட்டில்
ஊரோடு கிளிப்பாட்டுப் பாடி டாமல்
 உயர்கருத்தைத் தந்தவரே ! தமிழன் ஆட்சித்
தேரோட்டப் பாதைக்குத் தடைநிற் போரின்
 திமிர் அடக்கி வந்திட்ட புலியே ! மண்ணில்
ஈரோடு வரலாறு பிறக்கா விட்டால்
 எம்வழியை மாற்றுதற்கே யார்பிறப்பார் ?

காக்கையொன்று கரைந்தாலும் அதனைக் கேட்டு
 கால்பயணம் மாற்றிடுவார் ! வேலி யோரச்
சீக்காளிக் கழுதையொன்று கதறு மானால்
 தெய்வம் வந்து சொன்னதென்று நின்று கேட்பார் !
தேக்குமர இடுக்கினிலே பல்லி ஒன்று
 தீனிகண்டு குரல்தந்தால் புத்தி போகும்
போக்கு கெட்ட தமிழர்களை எழுப்பித் தட்டிப்
 ‘புதுமதி’யை ஊட்டியவர் நீங்கள் தானே !

பெண்ணொருத்தி குளிப்பதனை எட்டிப் பார்த்தால்
 பிழைஎன்று சட்டமுள்ள இந்த நாட்டில்
கண்ணெடுத்துப் பார்த்திட்ட தன்றி, அன்னார்
 கட்டிவந்த சேலையெல்லாம் திருடிச் சென்ற
வெண்ணெய் வெட்டிக் கண்ணன்
 அவன் படத்தைப் போட்டு
 வெறும் மேனிக் கன்னியரை எதிரில் காட்டி,
சிண்ணாரம் பேசி வந்த மதக்கூட்டத்தைக்
 கிழித்தெறிந்த சீர்திருத்தச் செம்மல் நீங்கள் !

நாமத்தை நெற்றியிலே சாத்திவிட்டு
 நம்மவர்கள் சொத்தெல்லாம் பறித்து வந்த
சோமாசாஸ் திரிக்கூட்டம் ஒடுங்கி விட்ட
 சுடர்க்கதையே உம்மாலே நிகழ்ந்த தன்றோ ?
‘பூமியையே சுருட்டியவன் ஒருவன் என்றால்
 புவியுலகம் பழம்பாயா ?’ என்றே கேட்டீர் !
சாமத்துக் கோழிகளின் கூச்சல் ஓட்டச்
 சரித்திரமாய் வந்தவரே ! எங்கே போனீர் ?

கேள்விகளே அறிவாட்கள் ; இருட்பு லத்தைக்
 கிழிக்கின்ற ஈட்டி என்றார் ‘சாக்ரடீ’ சும்
‘ஆள்வதிலும் பகுத்தறிவுத் திட்டம் தீட்டி
 ஆள்வதுதான் ஆட்சி’! என்றார் அறிஞர் அண்ணா !
சூள் உரைத்துத் தமிழ்க்குருதி கொதிக்க வைத்துச்
 சுடச் சுடவே பாவேந்தர் பாட்டைத் தந்தார் !
வேள்விகளைக் கோத்திரத்துக் குப்பை தன்னை
 வெடிவைத்துப் பொசுக்கியவர் நீங்கள் தானே !

திருப்பதியின் உண்டியலில் இலட்சம் இலட்சம்
 தினம்குவியும் சேதியினைக் கேட்கும் போதில்,
‘உருப்படுமா இந்நாடும்?’ என்றே கேட்டீர் !
 ‘உயிர்தருவோன் உயிர்ப்பலியா கேட்பான் ?’ என்றீர்!
கருப்பு மயிர் கடவுளுக்கே இலஞ்சம் தந்து
 கடாட்சத்தைப் பெற நினைக்கும் மடையர் கூட்டம்
செருப்பாகத் தேய்கிறதே அய்யா ! உங்கள்
 செயல்முடிக்கும் முன்னர் ஏன் பறந்தே போனீர் ?

**கவிஞர் கா.வேழவேந்தன்**

தலையங்கம்

## ‘ஜெய் ராம்’ முழக்கம் கேட்குது! ‘ஜெய் சீதா’ ஏன் கேட்பதில்லை?

பாரத ஒற்றுமைப் பயணத்தில் இருக்கும் இராகுல் காந்தி ஆர்.எஸ்.எஸ்-அய்ப் பார்த்து, “ஆர்.எஸ்.எஸ். என்றைக்குமே பெண்களை மதிக்காத இயக்கம்” என்று கூறியிருக்கிறார். இது 100% உண்மை. ஆர்.எஸ்.எஸ்.இல் ஒரு ‘சுவயம் சேவக்’ காக இதுவரை பெண்கள் சேர்க்கப்படுவதே இல்லை. தமிழிசை சவுந்தரராஜன் ஆளுநராகக் கூட வர முடியும், ஆனால் ஆர்.எஸ்.எஸ்.இல் சுவயம் சேவக்காக வர முடியாது. வானதி சீனிவாசனுக்கும் அதே நிலைதான். ஆனால் ஆர்.எஸ்.எஸ். இன் முன்னணி அமைப்புகளை உருவாக்கி அதில் பெண்களை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் சுவயம் சேவக்காக மட்டும் இன்று வரை அவர்கள் பெண்களை சேர்ப்பது கிடையாது. இராகுல் காந்தி எழுப்பியிருக்கிற முக்கிய கேள்வி, ‘ஜெய் ஸ்ரீராம் என்ற முழக்கத்தை முன் வைக்கிற ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஏன் ஜெய் சீதா என்ற முழக்கத்தை முன் வைக்கவில்லை?’ இது ஒரு நியாயமான கேள்வி.

சீதையைப் பொறுத்தவரை இராமனுடைய கட்டளை களை பல இடங்களில் மீறி தன்னுடைய உரிமையை நிலை நாட்டியிருக்கிறார் என்று நம்மால் கூற முடியும். முதலில் இராமன் காட்டிற்கு செல்லும் போது சீதை தன் உடன் வர வேண்டாம் என்று இராமன் கட்டளையிடுகிறான். ஆனால் சீதை அதைக் கேட்பதற்குத் தயாராக இல்லை. நானும் உன் உடன் வருவேன் என்று இராமனுடன் காட்டிற்குள் சீதை இருக்கும் குடியிருப்பு அருகே இராமனுடைய தம்பி இலட்சுமணன் ஒரு நீண்ட கோட்டைப் போட்டு இந்தக் கோட்டைத் தாண்டி சீதை வரக்கூடாது, வந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று எச்சரிக்கிறான். ஆனால் இலட்சுமணன் போட்ட கோட்டை சீதைத் தாண்டி விடுகிறாள். அதன் காரணமாகத்தான் இராவணனால் சீதை கடத்தப்படுகிறாள் என்று இராமாயணம் கூறுகிறது.

ஒரு திரைப்படத்தில் கூட ஒரு பாடல் இப்படி வருகிறது, ‘கோடு போட்டு நிற்கச் சொன்னான், சீதை நிற்க வில்லையே! சீதை அங்கு நின்றிருந்தால் இராமன் கதை இல்லையே!’ என்று அந்தப் பாடல் வரிகள் வரும். இலட்சுமணன் போட்ட கோட்டைத் தாண்டியதால் தான் இராமாயணம் என்ற ஒன்றே நிகழ்ந்தது என்று நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். காட்டிலிருந்து நாட்டுக்கு திரும்பியவுடன் சீதையின் கற்பின் மீது இராமனுக்கு சந்தேகம் ஏற்படுகிறது. எனவே தீயில் இறங்குமாறு சீதைக்கு இராமன் கட்டளையிடுகிறான். இராமன் கட்டளையை ஏற்றுக் கொண்டு சீதை நெருப்பில் இறங்கி தன்னுடைய கற்பை நிரூபிக்கிறாள். ஆனால், அதே போல் இராமனும் தன்னுடைய கற்பை நிரூபிப்பதற்கு தீயில் இறங்குவதுதான் நியாயம். ஆனால் இராமன் தீயில் இறங்கவில்லை. இறுதியாக, இராமன் சரயு நதிக்கரையில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறான் என்று இராமாயணம் கூறுகிறது. சீதையினுடைய வாழ்க்கை, இராமனுடன் இணைந்து வாழ்ந்த வாழ்க்கை என்பது இப்படி பல துயரங்களைக் கடந்து வந்த வாழ்க்கையாகவே இருந்திருக்கிறது.

திருமண வீடுகளில் வாழ்த்துபவர்கள் கூட இராமன் - சீதையைப் போல வாழ வேண்டும் என்று வாழ்த்துவதற்கு எவரும் தயாராக இல்லை. அவர்களைப் போல வாழ்ந்தால் வாழ்க்கை நிச்சயம் நிம்மதியாக இருக்க முடியாது என்று அனைவருக்கும் தெரிந்த செய்தியாக இருக்கிறது. ஆனாலும், இவைகளெல்லாம் இந்த நாட்டின் புனித காப்பியங்களாக போற்றப்பட்டு வருகின்றன. இந்த நாட்டில் புராணங்கள் என்று கூறப்படுபவையும், இலக்கியங்கள் என்பவைகளும் பெண்களுடைய அடிமைத்தனத்தைத் தான் வலியுறுத்து கின்றன என்பது தான் பெரியாருடைய கருத்தாக இருந்திருக்கிறது.

பெரியார் கூறிய காரணம், ‘இந்த இலக்கியங்களையும், புராணங்களையும் உருவாக்கியவர்கள் ஆண்களாக இருக்கிறார்கள்’ என்பது தான். இராகுல் காந்தி ஆர்.எஸ்.எஸ். அய்ப் பார்த்து, ‘பெண்களை நீங்கள் சீதையை ஏன் மதிப்பதில்லை?’ என்ற கேள்வி மிகவும் அர்த்தம் வாய்ந்தது.

பம்பாய் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று வந்தது. வழக்கைத் தொடர்ந்த பெண், கணவன் பணிமாற்றலாகிப் போகும் இடம்தோறும் தானும் போக முடியாது என்பது வழக்கு. தீர்ப்பளித்த நீதிபதி ராமனுடன் 14 ஆண்டுகள் காட்டில் கணவனுக்காக வாழ்ந்ததே இந்திய மனைவிகளுக்கு முன் உதாரணம் என்று தீர்ப்பளித்தார். இப்படிப் பழமைச் சிந்தனையில் ஊறிப்போன நீதிபதிகளும் இருக்கிறார்கள். திருமணம் செய்யாது பிறக்கும் குழந்தைகளுக்கும் சட்டப்படி உரிமை உண்டு என்று தீர்ப்பளிக்கும் உச்சநீதிமன்றத்தின் சந்திரசூட் போன்ற நீதிபதிகளும் இருக்கிறார்கள். ‘இந்து தர்மம்’ பெண்களை ‘சூத்திரர்கள்’ பட்டியலில் தான் வைத்துள்ளது. அவர்களுக்குப் பூணூல் போடும் உரிமையோ, புரோகிதம் செய்யும் உரிமையோ தடைபடுத்தப்பட்டுள்ளது. நிதியமைச்சர் நிர்மலா, அய்யப்பன் கோயிலுக்குள் நுழைய முடியாது. சமூகத்தின் சரிபாதி இனத்தை தர்மம், சாஸ்திரம், சடங்குகளால் அடிமையாக்கி வைத்திருக்கும் பார்ப்பனியம், அழியாத வரை பெண்ணுரிமை சாதி ஒழிப்பு சாத்தியப் படாது. இராகுல்காந்தி போன்ற தலைவர்களிடமிருந்து இப்படி ஒரு பெண்ணுரிமை சிந்தனை வெடித்துக் கிளம்பியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதுதான்!

# உதயநிதி ஸ்டாலின் நியமனம் பெரியாரிஸ்டுகள் மகிழ்ச்சி!

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் வாரிசுகள் அரசியலுக்கு வரக் கூடாதா?

உதயநிதி ஸ்டாலின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். அவருடைய நியமனத்திற்கு நமது மகிழ்ச்சியையும், பாராட்டுகளையும் முதலில் தெரிவித்துக் கொள்வோம். வாரிசு அரசியல் வந்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் புலம்புவதில் எந்த நியாயமும் இல்லை. அப்படி ஒரு அளவுகோளில் பார்த்தால் இந்தியாவில் எந்த அரசியல் கட்சியும் இதிலிருந்து தப்பி விட முடியாது. (இது குறித்த விரிவான பட்டியலைத் தனியாக வெளியிட் டுள்ளோம்) ஆனால் வாரிசு அரசியல் இப்போது எந்தப் பார்வையில் பார்க்கப்படுகிறது என்று சொன்னால், மன்னர்கள் காலத்தில் நடந்த வாரிசு அரசியலோடு ஜனநாயக காலத்தில் நடக்கின்ற வாரிசு அரசியலை ஒப்பிட்டுப் பேசுகின்ற ஒரு போக்கு தான் காணப்படுகிறது. இரண்டுக்கும் பண்பு ரீதியில், குணாதிசய வகையில் வேறுபாடு உண்டு.

ஜனநாயக முறையில் வாரிசு அரசியலில் ஈடுபடுகின்றவர்கள் நேரடி நியமனங்கள் வழியாக வராமல் தேர்தலில் நின்று மக்கள் வாக்குகளைப் பெற்று அதற்குப் பிறகு தான் அவர்கள் அதிகாரத்துக்கு வருகிறார்கள். மக்கள் ஆதரவோடு அதிகாரத்துக்கு வருகிறவர்களை, அவர்கள் வாரிசுகளாக இருந்துவிட்டார்கள் என்பதற்காக வாரிசு அரசியல் என்ற முத்திரை குத்துவதில் எந்த நியாயமும் இருப்பதாக நமக்குப் புரியவில்லை. இதற்கு ஆழமான பதில் ஒன்றை உதயநிதி ஸ்டாலின் வழங்கி இருக்கிறார்.

“இத்தகைய விமர்சனங்கள் வரத் தான் செய்யும் நான் அதை எதிர் கொண்டு தான் ஆக வேண்டும். அதை எப்படி எதிர்கொள்வேன் என்று சொன்னால் என்னுடைய எதிர் கால செயல்பாடுகளின் வழியாக, மக்களின் மனங்களை வெல்வதன் வழியாக அதை நான் எதிர் கொள்வேன்” என்று அவர் மிகவும் பகுத்தறிவுப் பார்வையுடன் ஒரு பதிலை முன்வைத்து இருக்கிறார்.

ஏற்கனவே கடந்த காலங்களில் தனக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பையும் தன்னுடைய செயல்பாடுகள் மூலம் அவர் வெற்றிகரமாக நிறைவேற்றியதையும் பட்டியல் போட்டுக் காட்டி இருக்கிறார். அவர் வெளியிட்டு இருக்கிற அறிக்கையொன்றில் கூறியிருக்கிற கருத்தும் அவரது ஆழமான புரிதலை விளக்கிக் கொண்டு இருக்கிறது . “மக்களுக்கும் அரசு நிர்வாகத்திற்கும் இடையே ஒரு ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்கு அதிக பொறுமை தேவைப்படுகிறது. அந்த வகையில் தொகுதி மக்களின் பிரதிநிதியாக எனது அனுபவம் எனக்கான கடைமையை உணர்த்தி உள்ளது” என்று அவர் கூறி இருப்பது அனுபவத்தின் வாயிலாகக் கற்றறிந்த அவர் பாடத்தை உணர்த்துகிறது. ஆகவே பொறுப்பும் கடமையும் நிறைந்த ஒரு இடத்திற்கு நான் வந்து இருக்கிறேனே தவிர அதிகார மய்யத்தில் அல்ல என்பதை மிகத் தெளிவாக அவர் விளக்கி யிருக்கிறார்.

நம்மைப் பொறுத்தவரை அதிகார அரசியலாக இருந்தாலும் சரி, வாரிசு அரசியலாக இருந்தாலும் சரி, அந்த அரசியல் எதற்குப் பயன்படப் போகிறது என்பது தான் மிக முக்கியமான ஒன்றாகும்.

தன்னை ஒரு பெரியாரியல்வாதியாக இப்போதும் அடையாளப்படுத்திக் கொண்டு இருக்கிற உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தப் பொறுப்புக்கு வந்து இருக்கிறார் என்ற முறையில் பெரியாரிஸ்டுக்களைப் பொறுத்த வரை உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சியான நியமனம் என்று தான் பார்க்கிறோம். அண்ணா விற்குப் பிறகு முதல்வராக யார் வருவது என்ற போட்டி நாவலருக்கும் கலைஞருக்கும் இருந்த நேரத்தில் கலைஞரை விட நாவலர் மூத்தவராக இருந்தாலும், கூட பெரியார் கலைஞர் பக்கம் தான் உறுதியாக இருந்தார். அதற்குக் காரணம் கலைஞர் சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து வந்த ஜாதிக் கொடுமை எனும் வலிகளை உணர்ந்த ஒரு தலைவர். அவர் தான் சமூகநீதி யோடு செயல்படக்கூடியவராக இருப்பார் என்ற முடிவுக்கு வந்தார். அதே பெரியார் பார்வையில் தான் இப்போது நாம் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் பார்க்கிறோம்.

யார் தான் வாரிசு அரசியலில் இல்லை என்று எதிர்கேள்வி கேட்பதைவிட விமர்சனம் வரும்; செயல்பாடுகளால் எதிர்கொள்வேன் என்ற முதிர்ச்சியான பதிலே அவர் இப்பதவிக்கு முழு தகுதியானவர் என்பதற்கு அடையாளம்.

## சைனி–அபிலாஷ் இணையேற்பு விழா

கழகத் தோழர் சைனி - அபிலாஷ் ஆகியோரின் இணையேற்பு விழா 14.12.2022 அன்று காலை 12 மணியளவில் கோவை ஆர்.எஸ்.புரம் புனித அருளானந்தர் தேவாலயத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சி தொடக்கமாக நிமிர்வு குழுவினரின் பறை இசை நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கழகச் செயற்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார்.

தோழர்கள் புரட்சித் தமிழன், மாதவன் சங்கர், வெங்கட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சபரிகிரி வரவேற்புரையாற்றினார். கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கிருட்டிணன் நன்றியுரை யாற்றினார். நிகழ்ச்சியை சிவராசு தொகுத்து வழங்கினார்..

கழகத் தோழர்கள் சார்பாக மணமக்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டது.

தோழர்கள் அய்யப்பன், துளசி, ஆனந்த், விவேக், ரேணுகா, மணிகண்டன், ராஜபாளையம் மு.ராம்குமார் ஆகியோர் இணையேற்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### உதயநிதியின் ஒற்றை வரி பதில்கள்

## இந்தியா—வி.பி.சிங்

விகடன் யூடியூபிற்கு, சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பேட்டியில், நெறியாளர் கூறும் பெயர்களுக்கு ஒரே வார்த்தையில் பதிலளிக்கும் வகையில், அவர் அளித்த ஒரு வார்த்தை பதில்கள்.

தமிழ்நாடு – கலைஞர்

இந்தியா – வி.பி.சிங்

பெரியார் – தன்மானம்

கலைஞர் – தமிழ்

மு.க.ஸ்டாலின் – உழைப்பு

திமுக – கலைஞர்

கடவுள் – இல்லை

## வீட்டு வேலைகள் ஆண்களுக்கு கட்டாயம்; பெண்கள் வீட்டு வேலைக்கு ஊதியம்

# கியூபா நாட்டின் புரட்சிகர பெண்ணுரிமைச் சட்டம்

**ம. கி. எட்வின் பிரபாகரன்**

"தேர்தல் அரசியல் இல்லாத கியூபா நாட்டில் (ஒற்றைக் கட்சி ஆட்சிமுறை), மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி குடும்பச் சட்டங்களை வகுத்து முதல்முறையாக வெளியிட்டுள்ளது அரசு. LGBT+ (வெவ்வேறு பாலின இயல்புகளைக் கொண்ட சமூகத்தை உணர்த்தும் குறிப்புச் சொல்) நலன், பெண்கள் நலன், குழந்தைகள் நலன், முதியோர் நலன் உள்ளிட்ட அனைத்து நலன்களும் பேணிப் பாதுகாக்கும்படியாக இக்குடும்பச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வாக்குரிமை உள்ளவர்களில் 74.01% மக்கள் வாக்களித்துள்ளனர். இவர்களில் 66.87 சதவீதத்தினர் புதுக் குடும்பச் சட்டத்திற்கு ஆதரவாகவும் மற்றவர்கள் எதிர்ப்பாகவும் வாக்களித் துள்ளனர். மூன்றாண்டுகளாக அரசின் தொடர்ச்சியான, தொலைக்காட்சி & வானொலிப் பிரச்சாரங்களே மக்களின் மனமாற்றத்திற்குக் காரணமாக இருந்துள்ளன.

1959இல் நடந்த கியூபா புரட்சிக்குப் பிறகான காலகட்டத்தில், 1960களிலும் 1970களிலும், LGBT+ மக்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்; சிறையில் அடைக்கப்பட்டனர்; தொழிலாளர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். 1979இல் ஓரினச் சேர்க்கைக்கு சட்ட அங்கீகாரம் கிடைத்திருந்தாலும் கூட, பகிரங்கமாக 'ஓரினச் சேர்க்கையாளர்' என்பதை வெளிப்படுத்துவது தடை செய்யப்பட்டிருந்தது (விதி 303a). 1988இல் வேற்றுமைகளுக்கு எதிரான பாலியல் கல்விப் பட்டறைகள் நடத்தப்பட்டன. 1993இல் இருந்து LGBT+ மக்களும் ஆயுதப்படைகளில் சேர்க்கப்பட்டனர். 2008இல் இருந்து மருத்துவர்கள் 'பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை'களைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். 2019இலேயே LGBT+ ஜோடிகளின் திருமணத்திற்கான முழுமையான சட்ட அங்கீகாரத்தை அரசு வழங்க முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும், கத்தோலிக்க கிறித்தவ மத குருக்களின் எதிர்ப்பால் அரசின் முயற்சிகள் கைவிடப்பட்டன. மூன்றாண்டுகள் கழித்து தற்போது (2022 செப்டம்பர்), அவர்களின் உரிமைகளை நிலைநாட்டும் விதமாகக் குடும்பச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. ஓரினச் சேர்க்கை இணையர்களின், "குழந்தையைத் தத்தெடுக்கும் உரிமை"யும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இச்சட்டத்தில் இன்னும் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன. வெறும் சட்ட விதிகளாக மட்டுமில்லாமல், "வீட்டு வேலைகளை ஆண்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும்" என்பது போன்ற பல அறிவுரைகளின் தொகுப்பாகவும் கியூபா குடும்பச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளும் கூட சம்பளத்துக்குரிய வேலைகளாகக் கருதப்பட்டு, அந்த வேலைகளும் "தொழிலாளர் உரிமை" வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. மற்றொரு சோசியலிச நாடான வெனிசுலாவில், 2007இல் இருந்து குடும்பத் தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஊதியம் வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது. நம்முடைய திமுக அரசும் கூட, விரைவில் குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்ய உள்ளதை, நாம் அறிவோம். இதன் மூலம் வீட்டு வேலைகளும், மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வரம்புக்குள் கொண்டு வரப்படுகின்றன.

கியூபா நாட்டில் மட்டும், கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஆண்களைவிட பெண்கள் ஒவ்வொரு வாரமும், (14-18) மணி நேரம் அதிகமாக உழைத்திருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நிறைய நேரம் இதிலேயே செலவாவதால், பெண்கள் பெறும் வெளிவேலைவாய்ப்புகளின் விகிதம் குறைவதும் தெரிய வந்துள்ளது. அதேபோல ஏழைகளின் உழைப்பைச் சுரண்டாமல், "பொதுநல நோக்கோடு செய்யப்படும் 'வாடகைத் தாய்' முறையை"யும் (surrogacy) இச்சட்டம் அங்கீகரித் துள்ளது. முதியோர்கள் குழந்தை வளர்ப்பில் ஈடுபடுவதும் தொழிலாளர் உரிமை வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு உடல்ரீதியாக தண்டனை வழங்குவதும் தடுக்கப்பட்டுள்ளது. "குழந்தைகளை வளர்ப்பது பெற்றோர்களின் அதிகாரம் (authority) சார்ந்த ஒன்றல்ல; அது பொறுப்பு (responsibility) சார்ந்தது" என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மனிதவளக் குறியீட்டில் (HDI), கியூபா 76ஆவது இடத்திலும் இந்தியா 132ஆவது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டு மனிதவளக்குறியீடு, 110ஆவது இடத்தில் இருக்கும் ஜமைக்கா நாட்டோடு பொருந்துகின்றது.



> திருநங்கையாகவோ திருநம்பியாகவோ தன்னுடைய மகனோ மகளோ இருக்கிறார் என்பதையே தாங்கிக் கொள்ள முடியாத இந்திய பெற்றோர்களால்; திருநங்கைகளையும் திருநம்பிகளையும் வீட்டை விட்டு வெளியேற்றும் இந்திய பெற்றோர்களால்; ஓரினச் சேர்க்கையாளர்களை எப்படி தாங்கிக் கொள்ள முடியும்? எனவே கியூபா அரசின் தொலைக்காட்சி & வானொலி பிரச்சாரங்களைப்போலவே, தமிழ்நாடு அரசும் இது குறித்த அறிவியல் பூர்வமான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் LGBT+ மக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளில் இருந்தும், சொல்லொணாத் துயரங்களில் இருந்தும், அவர்களுக்கு விடுதலை கிடைக்கும்.

கடந்த ஆண்டு (2021) மார்ச் மாதம், தமிழ்நாட்டு காவல்துறையிடம் இருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் பாதுகாப்புக்கோரி ஒரு ஓரினச்சேர்க்கை பெண்பால் இணையர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருந்தனர். அதன் தொடர்ச்சியாக நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், LGBT+ சொற்களஞ்சியத்தை (Glossary) அரசு வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார். இதன் விளைவாக இந்திய மொழிகளில் முதன்முறையாக, Intersex (இருபால்), Transgender (மருவிய பாலினம்), Gender non conforming person (பாலின வெளிப்பாட்டு அடையாளங்களோடு ஒத்துப் போகாதவர்), Trans Woman (திருநங்கை), Trans Man (திருநம்பி), Gender non binary (பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர்), Gender fluidity (நிலையற்றப் பாலினம்), Bisexual (இருபால் ஈர்ப்பு), Pansexual (அனைத்துப் பால் ஈர்ப்பு), Asexual (அல்பால் ஈர்ப்பு), Queer (பால் புதுமையர்) உள்ளிட்ட பலப் புதுச் சொற்களை அரசு உருவாக்கி, கடந்த ஆகஸ்ட் மாதம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

இதன் தொடர்ச்சியாக அக்டோபர் 27இல், தமிழ்நாடு திட்டக்குழு ஒரு LGBT+ கொள்கை முன்வரைவை உருவாக்கியது. இந்த முன்வரைவு, சமூக நலன் & பெண்களுக்கு அதிகாரமளித்தல் துறைக்கு நவம்பர் 15ஆம் நாள் முன்னனுப்பப்பட்டது. இதுகுறித்துச் சமூக நலத்துறை இயக்குனர், சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்களுடன் டிசம்பர் 01இல் சந்திப்பை நிகழ்த்தினார். சந்திப்பு தொடர்பான அறிக்கையை டிசம்பர் 05ஆம் நாள் அரசுக்கு அனுப்பினார். டிசம்பர் 09இல் வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் வந்த போது, LGBT+ மக்களைப் பாதுகாக்க, பொது மக்களிடம் கருத்துகளைக் கேட்ட பின்பு, மூன்று மாதத்துக்குள் கொள்கைகளை வகுத்து, நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அரசு உறுதியளித்துள்ளது. முதற்கட்டமாக, உரிய சட்ட விதிகளை இம்மாத இறுதிக்குள் கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், LGBT+ மக்கள் சந்திக்கும் சவால்களைப் பற்றி, பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்றும், ஏற்கனவே ஒரு லட்சம் ஆசிரியர்களுக்கு ஆன்லைன் மூலமாக LGBT+ மக்களைப் பற்றிய புரிதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், விண்ணப்பப் படிவங்களில் ஆண் பெண் ஆகிய கட்டங்களோடு மூன்றாம் பாலினங்களைக் குறிக்கும் கட்டமும் சேர்க்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மருத்துவர்களை "பாலின மறு சீரமைப்பு அறுவை சிகிச்சை"களைச் செய்ய அனுமதிக்கக் கூடாது என்று தமிழ்நாடு மருத்துவ மன்றமும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. தன்னுடைய மகனோ மகளோ "LGBT+" என்று பெற்றோர்கள் அறிந்து கொள்ளும் நிலையில், இத்தகைய முறையற்ற அறுவை சிகிச்சைகளைச் செய்து அவர்களுடைய பாலினத்தை மாற்றும் முயற்சிகளில் ஈடுபடுவதே, மருத்துவ மன்றம் இதனை எதிர்க்கக் காரணமாகும். திமுக அரசின் செயல்பாடுகளைப் பாராட்டிய நீதிபதி, வழக்கை ஒத்தி வைத்துள்ளார்.

பெரும்பான்மை மக்கள் மத்தியில், ஆண்களுக்கு பெண்கள் மீது ஈர்ப்பு ஏற்படுவதும் (Straight Man) பெண்களுக்கு ஆண்கள் மீது ஈர்ப்பு ஏற்படுவதும் (straight woman) இயற்கையானதாக இருப்பதைப் போலவே, சிறுபான்மை மக்கள் மத்தியில், ஒரு ஆணுக்கு ஆண் மீதோ (Gay) ஒரு பெண்ணுக்கு பெண் மீதோ (Lesbian) அல்லது ஒரு பாலினத்தவருக்கு அனைத்து பாலினத்தவர் மீதோ ஈர்ப்பு இருப்பதும் ஒரு சாராரின் இயற்கை தான்; (அல்லது) ஒரு பாலினத்தவருக்கு எந்த பாலினம் மீதும் ஈர்ப்பு ஏற்படாமலும் (அல்லது) ஒருவர் எந்த பாலினத்தையும் சேராதவராக இருப்பதும் கூட ஒரு சாராரின் இயற்கை தான். "இது ஒரு மனநல பிரச்சனை கிடையாது" என்று மருத்துவ உலகம் அறிவித்து பல பத்தாண்டுகள் கடந்துவிட்ட பின்பும் கூட, இந்த இயற்கையை இயற்கையாகவே அப்படியே ஏற்றுக் கொள்ளும் பக்குவம் மக்கள் மனதில் இன்னமும் உருவாகவில்லை.

திருநங்கையாகவோ திருநம்பியாகவோ தன்னுடைய மகனோ மகளோ இருக்கிறார் என்பதையே தாங்கிக் கொள்ள முடியாத இந்திய பெற்றோர்களால், திருநங்கைகளையும் திருநம்பிகளையும் வீட்டை விட்டு வெளியேற்றும் இந்திய பெற்றோர்களால் ஓரினச்சேர்க்கையாளர்களை எப்படி தாங்கிக் கொள்ள முடியும்? எனவே கியூபா அரசின் தொலைக்காட்சி & வானொலி பிரச்சாரங்களைப் போலவே, தமிழ்நாடு அரசும் இதுகுறித்த அறிவியல் பூர்வமான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் LGBT+ மக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளில் இருந்தும், சொல்லொணாத் துயரங்களில் இருந்தும் அவர்களுக்கு விடுதலை கிடைக்கும்."

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அடுக்கடுக்கான பட்டியல்: பாஜகவில் வாரிசு அரசியல் இல்லையா?

தமிழ்நாடு அமைச்சரவையில் புதிய அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் பதவியேற்றதைத் தொடர்ந்து, பாஜகவினர் திமுக வில் வாரிசு அரசியல் நடைபெறுகிறது என்று தொடர்ந்து குற்றம் சாட்டியே வருகின்றனர். குற்றம் சாட்டுவதுடன், பாஜகவில் வாரிசு அரசியலே கிடையாது என்றும் கூறி வருகின்றனர். பாஜகவிலும் வாரிசு அரசியல் உள்ளது என்பதை பலரும் சுட்டிக்காட்டி வரும் நிலையில், பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் வெளியிட்ட அறிக்கையில், "பாஜகவில் தலைமை பொறுப்புக்கு, ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் வருவது கிடையாது. தேசியத் தலைமை மட்டுமல்ல, எந்தவொரு மாநிலத் தலைமையிலும் வாரிசுகள் இல்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாஜகவின் பொறுப்புகளில் வேண்டுமானால் வாரிசுகள் இல்லாமல் இருக்கலாம் ஆனால் இந்திய ஒன்றியத்தின் அமைச்சரவையிலும், பாஜக ஆளும் மாநிலங்களின் அமைச்சரவைகளிலும் பாஜக வின் வாரிசுகள் எந்தளவிற்கு இடம் பெற்றுள்ளனர் என்பதை சிறு புள்ளிவிவரத்தின் மூலம் காணலாம்.

- பியூஸ் கோயல் - மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர், தந்தை: வேத் பிரகாஷ் கோயல் - முன்னாள் மத்திய அமைச்சர், தாய்: சந்திரகாந்தா கோயல் - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
- அனுராக் தாகூர் - மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டுத் துறை அமைச்சர், தந்தை: பிரேம் குமார் துமால் - முன்னாள் முதல்வர், ஹிமாச்சல் பிரதேசம்
- தர்மேந்திர பிரதான் - மத்திய கல்வித்துறை அமைச்சர், தந்தை: தேபேந்திர பிரதான் - முன்னாள் மத்திய அமைச்சர்
- ஜோதிராதித்ய சிந்தியா - மத்திய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர், தந்தை: மாதவராவ் சிந்தியா - முன்னாள் மத்திய அமைச்சர்
- ராஜ்நாத் சிங் - மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர், மகன்: பங்கஜ் சிங் - எம்.எல்.ஏ, உத்தரப்பிரதேசம்
- கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை, தந்தை: எஸ்.ஆர்.பொம்மை - முன்னாள் முதல்வர், கர்நாடகா
- துஷ்யந்த் சிங் - மக்களவை எம்.பி, தாய்: வசுந்தரா ராஜே - முன்னாள் முதல்வர் ராஜஸ்தான்
- வருண்காந்தி - மக்களவை எம்.பி, தாய்: மேனகா காந்தி - மக்களவை எம்.பி
- நீரஜ் சேகர் - மாநிலங்களவை எம்.பி, தந்தை: சந்திரசேகர் - முன்னாள் பிரதமர்
- ராஜ்வீர் சிங் - மக்களவை எம்.பி, தந்தை: கல்யாண் சிங் - முன்னாள் முதல்வர், உத்தரப்பிரதேசம்.

இவர்களெல்லாம் பாஜகவின் வாரிசுகள் இல்லையென்று கூறப்போகிறார்களா பாஜகவினர் வானதி சீனிவாசன் அறிக்கையில், "பிறப்பின் அடிப்படையில் ஒருவர் கட்சியின் தலைமைக்கு வருவது தான்" வாரிசு அரசியல் என்று வாரிசு அரசியலுக்கு ஒரு புது விளக்கத்தையும் கொடுத்துள்ளார். தற்போது, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் (2017 - 2019 வரை பாதுகாப்புத் துறை அமைச்சர்) ஆகியோர் எந்த தொகுதியில் நின்று மக்களின் வாக்குகள் மூலம் வெற்றி பெற்றனர்? தேர்தலையே சந்திக்காதவர்கள் நாட்டின் உயரிய பொறுப்புகளில் நியமிப்பதற்கு காரணம் தான் என்ன? அவர்களின் செயல்களா அல்லது பிறப்பின் அடிப்படையிலா? இறுதியாக, இந்தியாவில் வேறு எந்த விளையாட்டிற்கும் அல்லாத முக்கியத்துவம் வழங்கப்படும் கிரிக்கெட் வாரியத்தின் (BCCI) தலைவராக அமித்ஷாவின் மகன் ஜெய்ஷா நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டாரே அது எதன் அடிப்படையில்?

## நாட்காட்டி தயார்!




2023ஆம் ஆண்டுக்கான திராவிடர் விடுதலைக் கழகத்தின் நாட்காட்டி தயாராக உள்ளது. சனாதன எதிர்ப்பாளர்கள், சமூகப் புரட்சியாளர்கள், சீர்திருத்தவாதிகள் படங்களுடன் அழகிய வடிவமைப்பில் உள்ள நாட்காட்டி ஒன்றின் விலை ரூ.50/- (ரூபாய் அய்ம்பது மட்டும்). முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே நாட்காட்டி அனுப்ப இயலும். நாட்காட்டி தேவைப்படுவோர் தொடர்புக்கு :

**தபசி குமரன்** (99417 59641)
தலைமை நிலையச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.

# விழுப்புரத்தில் ஜாதிக் கொடுமைகள்: களமிறங்க கழகத் தோழர்கள் முடிவு

விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 16-12-22 அன்று மாலை 4.30 மணியளவில் கழக மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், கழகத் தலைமைக் குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர்செல்வம், காவை. ஈஸ்வரன், ந. அய்யனார் ஆகியோர் கலந்து கொண்டு கழகம் விழுப்புரம் மாவட்ட அளவில் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் ஜாதி பிரச்சனைகள், தலித் மக்கள் சுடுகாட்டில் பிணத்தை அடக்கம் செய்வதில் பிரச்சனைகள் பற்றி பத்திரிக்கைகளில் செய்திகள் வருகின்றன. இதுகுறித்து மாவட்ட கழகத் தோழர்கள் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் துணை நிற்க வேண்டும் என்றும் இன்றைய அரசியல் சூழல், கழக வார ஏடு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா சேர்த்தல் குறித்தும் விரிவாகப் பேசினார்கள்.

நிறைவுரையாக கழகத் தலைவர் கொளத்தூர்மணி கழக வாரஏடு பெரியார் முழக்கத்தின் அவசியத்தையும் மக்களிடம் கழகத்தின் நிலைபாட்டை தெரிவிக்கும் விதமாக கொண்டு சேர்க்க வேண்டியதையும் பெரியார், அம்பேத்கர் ஜாதி பாகுபாட்டிற்கு காரணமான இந்து மதம் பார்ப்பனியத்தை அம்பலப்படுத்தும் விதமாக தொடர்ந்து மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்த்ததை வரலாற்று தகவலுடன் விரிவாக பேசினார்.

கழக மாவட்டத் தலைவர் பூ.ஆ. இளையரசன், மாவட்டச் செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ் மாவட்ட அளவில் புதிய தோழர்களை இணைப்பது கிராமப் பகுதிகளில் தெருமுனை பரப்புரை, கருத்தரங்கம் பொதுக் கூட்டங்கள் நடத்துவது துண்டறிக்கை போஸ்ட்டர்கள் மூலம் மற்றும் கழக வார ஏடு சந்தாக்களை சேர்த்து கழக செயல்பாட்டை மக்களிடம் கொண்டு சேர்க்கும் களப்பணியை மேற்கொள்ள உள்ளதாவும் விக்கிரவாண்டி அடுத்து கட்டயம் பூண்டியில் தலித் மக்கள்பிணத்தை அடக்கம் செய்ய எதிர்ப்பு தெரிவித்ததற்கு கழக சார்பில் கழகத் தோழர் சட்டக் கல்லூரி மாணவர் அன்பழகன் உட்பட 10 க்கும் சட்டக் கல்லூரி மாணவர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தோம் விக்கிரவாண்டி காவல் நிலைய ஆய்வாளர் இதுபோன்று இனிமேல் நடக்காது என்றும் கோட்டாட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி சுடுகாடு அமைக்க உள்ளதை உறுதிபடுத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களிடம் உங்களுக்கு ஜாதி ரீதியான பிரச்சனையை அவர்கள் ஏற்படுத்தினால் திராவிடர் விடுதலைக் கழகத்தை தொடர்பு கொள்ளுங்கள் என்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவை தெரிவித்து விட்டு வந்தோம் மாவட்ட அளவில் வேறு இடங்களில் ஜாதி கொடுமைகள் நடந்தால் ஆய்வு செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நின்று நடவடிக்கை எடுக்க துணை நிற்போம் என்று அறிவித்தார்கள்

நிகழ்ச்சியில் கழக இளைஞரணி செயலாளர் கிருஷ்ணராஜ், கழக இளைஞரணி அமைப்பாளர் அழகர் மற்றும் கழகத் தோழர்கள் தமிழ்ச் செல்வன், உதயன், நந்தகுமார், அறிவுடைநம்பி, சக்திவேல், நிவேதிதா, கவியரசன் விழுப்புரம் கமல், புஷ்பராஜ், கோட்டகுப்பம் பகுதி தோழர்கள் செல்வகுமார், வினோத்ராஜ் சாந்தி நிலையம் மேலாளர் அய்யா பாலு ஆகியோர் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் மற்றும் கழக மாநில பொறுப்பாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியது தோழர்களுக்கு உற்சாகத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் மாவட்ட தலைவர் நன்றி கூறி கூட்டம் நிறைவு பெற்றது.

## கழகத் தலைவர் உள்ளிட்ட பொறுப்பாளர்களின் மூன்றாம் கட்ட சுற்றுப் பயணம்

கழகத் தலைவர் மற்றும் தலைமைக் குழுப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளும் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்களின் மூன்றாம் கட்டப் பயணம் கீழ்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

05.01.2023 காலை 10.00 மணி - சேலம் மேற்கு மாவட்டம்

05.01.2023 மாலை 4.00 மணி - தர்மபுரி மாவட்டம் (இரவு தங்கல் கிருட்டிணகிரி)

06.01.2023 காலை 10.00 மணி - கிருட்டிணகிரி மாவட்டம்

06.01.2023 மாலை 4.00 மணி - கள்ளக்குறிச்சி மாவட்டம் (இரவு தங்கல் சேலம்)

07.01.2023 காலை 10.00 மணி - சேலம் கிழக்குமாவட்டம்

07 01.2023 மாலை 4.00 மணி - ஈரோடு தெற்கு மாவட்டம் (இரவு தங்கல் ஈரோடு)

08.01.2023 காலை 10.00 மணி - ஈரோடு வடக்கு மாவட்டம்

மேற்கண்ட மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெறும் ஊர் மற்றும் இடத்தை முடிவு செய்து தலைமைக் கழகத்திற்கு தகவல் தரக் கேட்டு கொள்ள படுகிறார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd December 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN